# இலங்கையில் தமிழருக்கு எதிராகப் போரிட்டவர் இந்தியாவின் புதிய இராணுவ தளபதியாகிறார்



இந்தியாவின் புதிய இராணுவ தளபதியாக கிழக்குப் பிராந்திய இராணுவ கொமாண்டர் லெப்டினன்ட் ஜெனரல் வி.கே.சிங் (59) நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை பாதுகாப்பு அமைச்சகம் பிறப்பித்தது. தற்போதைய இராணுவ தளபதி தீபக் கபூர், மார்ச் 31ம் திகதி ஓய்வு பெறுகிறார். அதே நாளில் வி.கே.சிங், அப்பொறுப்பை ஏற்றுக் கொள்கிறார். 2 ஆண்டுகளுக்கு அவர் இப்பதவியில் இருப்பார். 1970ம் ஆண்டு இராணுவத்தில் சேர்ந்த இவர், வங்காளதேச போரில் ஈடுபட்டுள்ளார். 1987 முதல் 1989ம் ஆண்டுவரை, இலங்கையில் இந்தியப்படையினர் நிலை கொண்டிருந்த காலத்தில் இவரும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவர். விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் எனக்கூறி இலங்கையில் இந்திய இராணுவம் நிலைகொண்டிருந்த காலத்தில் பல ஆயிரக்கணக்கான பொது மக்கள் அப் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர். 'ஒபரேஷன் பவன்' நடவடிக்கையின் முக்கிய தளபதியாக இவர் இருந்தார். இலங்கையில் பணியாற்றியமைக்காக இவருக்கு 'யுத்த சேனா பதக்கம்' வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. அத்துடன், சிறப்பாக பணியாற்றியதற்காக 'யுத் சேனா பதக்கம், ஆதி விஷிஸ்ட் சேவா பதக்கம்' ஆகியவற்றையும் இவர் பெற்றுள்ளார்.

இதேவேளை, இராணுவ தலைமை தளபதியாக இருக்கும் தீபக் கபூர், அமெரிக்கா சென்று இருந்தபோது இராணுவ போர் ஒத்திகையில் அளவுக்கு அதிகமான வெடிச் சத்தத்தை கேட்க நேர்ந்ததால் அவரது காதின் கேட்கும் திறன் பாதிக்கப்பட்டது. அதனால் அவர் பணியாற்ற முடியாது என்று இராணுவ மருத்துவமனை மருத்தவர்கள் கூறிவிட்டனர். இதையடுத்தே அவர் ஓய்வு பெறுகிறார்.

## அமெரிக்காவில் காந்தி மாவட்டம்

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தின் ஒரு மாவட்டத்துக்கு அந்நாட்டு அரசு மகாத்மா காந்தி பெயரை வைத்துள்ளது. டெக்சாஸ் மாநிலத்தின் தென்கிழக்கு ஹஸ்டன் பகுதியில் உள்ள மாவட்டத்தின் பெயர் ஹல்கிராப்ட் என்று இருந்தது. அங்கு ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட ஆசிய நாட்டினர் வசிக்கின்றனர். அவர்களில் பெரும்பாலோர் இந்தியர்கள். இந்தப் பகுதி மக்கள் கடந்த 7 ஆண்டுகளாக அமெரிக்க அரசிடம் இந்தியர்கள் அதிகம் வசிக்கும் அந்தப் பகுதிக்கு மகாத்மா காந்தி பெயரிட வேண்டும் என்று கோரி வந்தனர். அதை இப்போது அமெரிக்க அரசு ஏற்று உத்தரவு பிறப்பித்துள்ளது. மகாத்மா காந்தியின் 141வது பிறந்த ஆண்டான இப்போது ஹல்கிராப்ட் மாவட்டத்துக்கு மகாத்மா காந்தி மாவட்டம் என்று பெயரிடப்பட்டுள்ளது. இதை அரசு அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. ஹஸ்டனில் அமெரிக்காவுக்கான இந்திய தூதரக அதிகாரி சஞ்சீவ் அரோரா முன்னிலையில் ஹஸ்டன் மேயர் அன்னிஸ் பார்க்கர் இந்த பெயர் மாற்றத்தை வெளியிட்டார். 90 சதவீதத்துக்கு மேல் இந்தியர்கள் வசிக்கும் இந்தப் பகுதி 'லிட்டில் இந்தியா' என்று அழைக்கப்படுகிறது.



## இந்திய விமானத்தை கடத்தி பிரித்தானியா மீது தாக்க முயற்சி

– இந்தியா எச்சரிக்கை

மும்பை அல்லது டில்லியில் இருந்து செல்லும் இந்திய விமானத்தை அல்-ஹைடாவுடன் தொடர்புடைய தீவிரவாதிகள் கடத்திச்சென்று, பிரித்தானிய நகரம் மீது அந்த விமானத்தை கொண்டு மோத திட்டமிட்டுள்ளதாக இந்தியா எச்சரித்துள்ளது.

இந்தியாவில் சமீபத்தில் கைது செய்யப்பட்ட ஹர்கத்-உல்-ஜிகாத்-இஸ்லாமி தீவிரவாத இயக்க தலைவர் அம்ஜத் க்வாஜாவிடம் நடத்தப்பட்ட விசாரணையில் இத்தகவல் தெரிய வந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இதுகுறித்து, பிரித்தானிய உளவு அமைப்பான எம்ஐ-5ன் அதிகாரிகளுக்கும் இந்தியா தகவல் வழங்கியுள்ளது.

## இந்தி தேசிய மொழி அல்ல நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

இந்தியாவில் பெரும்பாலான மக்களால் பேசப்படும் இந்தி மொழி, தேசிய மொழி இல்லை என குஜராத் உயர் நீதிமன்றம் அதிரடியான தீர்ப்பை வழங்கியுள்ளது. தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து பொருட்களிலும் அதைப் பற்றிய விவரங்களை இந்தியில் வெளியிட மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டும் என அகமதாபாத்தைச் சேர்ந்த சுரேஷ் கச்சாடியா என்பவர் குஜராத் உயர் நீதிமன்றத்தில் பொது நல வழக்கு தொடர்ந்தார். இந்தி தேசிய மொழியாக இருப்பதாலும், பெருவாரியான மக்கள் இந்தியில் பேசுவதாலும் இந்தியில் விவரங்களை அச்சிட்டு வெளியிட உத்தரவிட வேண்டும் என மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த வழக்கை அகமதாபாத் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான பிரிவினர் விசாரித்து, இந்தியை தேசிய மொழியாக கருத முடியாது என்று தீர்ப்பளித்துள்ளது. தீர்ப்பில் கூறியிருப்பதாவது, இந்தி மொழி நமது தேசிய மொழி என எந்த சட்டத்திலும், அரசு அறிவிப்பிலும் கூறப்படவில்லை. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலும் இந்தி மொழி நமது தேசிய மொழி எனக் குறிப்பிடப்படவில்லை. இந்தி மொழிக்கு அதிகாரப்பூர்வ மொழி என்ற அந்தஸ்தை மட்டுமே இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் கொடுத்துள்ளது. மத்திய அரசின் எடை மற்றும் அளவு தர நிர்ணய சட்டத்தில்கூட உற்பத்தி செய்யப்படும் பொருட்களைப் பற்றிய விவரங்களை இந்தி அல்லது ஆங்கிலத்தில் குறிப்பிட வேண்டும் என்று தான் கூறப்பட்டுள்ளது. இரண்டு மொழியிலும் வெளியிட வேண்டும் என்று கூறப்படவில்லை. பொருட்களின் விவரங்களை ஆங்கிலத்தில் அச்சிட்டு வெளியிடுவது உற்பத்தியாளர்களின் தனி உரிமையாகும் இதனால் உற்பத்தி பொருட்களின் விவரங்களை இந்தியில் அச்சிட்டு வெளியிட வேண்டும் என மாநில அரசுகளுக்கும், உற்பத்தி நிறுவனங்களுக்கும் உத்தரவிட முடியாது. இவ்வாறு தீர்ப்பில் நீதிபதிகள் கூறியுள்ளனர்.

## हिन्दी वर्णमाला

पढ़ो और याद करो

अ आ इ ई उ ऊ ए ऐ ओ औ

क ख ग घ (ङ)

च छ ज झ (ञ)

ट ठ ड ढ ण ड़ ढ़

त थ द ध न

प फ ब भ म

## இந்திய அரச விளம்பரத்தில் பாகிஸ்தான் விமானப்படை முன்னாள் தளபதி!

இந்திய அரசாங்கத்தின் பத்திரிகை விளம்பரம் ஒன்றில்




பாகிஸ்தான் முன்னாள் (2006ம் ஆண்டு முதல் 2009ம் ஆண்டு வரை) விமானப்படைத் தளபதி படம் வெளியான விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. பெண் கருக் கலைப்பு, பெண் சிசுக் கொலை போன்றவற்றில் இந்தியப் பெற்றோர்கள் ஈடுபடுவதை நிறுத்தக் கோரும் வகையிலான பத்திரிகை விளம்பரத்தில் பிற இந்திய பிரபலங்களின் படங்களோடு விமானப் படைத் தளபதி ஏர் சீஃப் மார்ஷல் தன்வீர் மஹ்மூத் அகமதுவினுடைய படமும் இடம்பெற்றிருந்தது. பாகிஸ்தான் இராணுவத்தின் முக்கிய பிரமுகரான தன்வீரின் படம் எவ்வாறு இந்த விளம்பரத்துக்குள் இடம்பெற நேர்ந்தது என்பது குறித்து டில்லியிலுள்ள இந்திய பிரதமர் அலுவலகம் விசாரணை ஒன்றுக்கு உத்தரவிட்டுள்ளது. அத்துடன், படம் தவறுதலாகப் பயன்படுத்தப்பட்டமை குறித்து இந்திய அதிகாரிகள் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

இந்திய விமானப்படை தளபதி பி.வி.நாயக்கின் படத்துக்கு பதிலாக, தவறுதலாக பாகிஸ்தான் விமானப்படையின் முன்னாள் தளபதி படம் இடம்பெற்று விட்டதாக கூறப்படுகிறது. இருந்தாலும் இந்த விவகாரம் மத்திய அரசுக்கு இக்கட்டான நிலைமையை ஏற்படுத்தி உள்ளது.

## நீண்ட காலம் சிறையில் வாடும் 1.75 இலட்சம் கைதிகள் விடுதலை

சிறுகுற்றங்களுக்காக கைதாகி நீண்ட நாட்களாக சிறையில் வாடும் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் விசாரணை கைதிகளை அடுத்த 6 மாதத்துக்குள் விடுவிக்க வழி செய்யும் புதிய திட்டத்தை மத்திய அரசு அமல் செய்துள்ளது. இந்தியாவில் மொத்தம் 1,500க்கும் மேற்பட்ட சிறைச்சாலைகள்



உள்ளன. இங்கு மொத்தம் 2 இலட்சம் கைதிகளை அடைத்து வைக்க வசதி உள்ளது. ஆனால், விசாரணை கைதிகள் எண்ணிக்கையே 3 இலட்சத்தை தாண்டிவிட்டது. இதுதவிர 1.25 இலட்சம் தண்டனை கைதிகளும் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். சிறைச்சாலைகளில் அளவுக்கு அதிகமான கைதிகள் அடைக்கப்பட்டுள்ளதால் அங்கு மனித உரிமை மீறல் சம்பவங்கள் அடிக்கடி நடப்பதாக புகார்கள் எழுந்தது.

இது பற்றி பரிசீலித்த மத்திய அரசு, சிறைகளில் உள்ள விசாரணை கைதிகள் எண்ணிக்கையை குறைக்க முடிவு செய்தது. இதற்காக குடியரசு தினமான செவ்வாயன்று முதல் அதிரடி திட்டம் ஒன்றை மத்திய சட்ட அமைச்சகம் அமல் படுத்தி உள்ளது. இந்த திட்டத்தின்படி வழக்கு விசாரணை தாமதமானதால் நீண்ட காலமாக சிறையில் வாடும் சிறு குற்றங்கள் செய்தவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள். மொத்தமுள்ள விசாரணை கைதிகளில் 1.75 இலட்சம் பேரை அடுத்த 6 மாதத்துக்குள் விடுதலை செய்யவோ, பிணையில் விடுவிக்கவோ நடவடிக்கை எடுக்க அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.